23.06.2026.

O.S.No. 14/2024

PW2– சண்முகசுந்தரம் – த/பெ. பழனிசெட்டியார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.06.2026.

குறுக்கு விசாரணை : (1ம் பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 3ம் பிரதிவாதி எனது சகோதரியின் கணவராவார். அவர் இலஞ்சியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு 2 பெண்குழந்தைகள் என்றால் சரிதான். அவருக்கு 1989ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கு 3ம் பிரதிவாதியை திருமணத்தின்முன்பே பழக்கம்.

2. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வழக்கின் விவரங்கள் வாதி வீட்டிற்கு வந்த தபாலின் அடிப்படையில் தான் தெரியும். அப்போது நான் வழக்கு எண்களை குறிக்கவில்லை. ஆனால் படித்தபோது எனக்கு ஞபாகம் இருந்தது. ஆகையால் எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

3. **நீதிமன்ற கேள்வி –** எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்னென்ன வழக்கு எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

4. 2ம் பிரதிவாதி கோயம்புத்தூரில் வசித்துவருகிறார். ஆனால் பிராதில் 2ம் பிரதிவாதியும், வாதியும் ஒரே முகவரியில்தான் குடியிருந்துவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வப்போது வந்து செல்வார். வாதிக்கு பிராது தபசில்சொத்தில் எவ்வளவு உரிமை என்றால் 15ல் 2 பங்கு உள்ளது. மீதமுள்ள 13 பங்கு யாருக்கு உரிமை உள்ளது என்றால் அப்பாராந்த சுவாமிகள் வாரிசுகளுக்கு உரிமை உண்டு.

5. 3ம் பிரதிவாதி எவ்வாறு செலவு செய்தார் என்று எனக்கு தெரியாது. 2017ம் ஆண்டு 3ம் பிரதிவாதி, என்னிடம் ரூ.1லட்சம் அடமானக்கடன் வாங்கினாரா என்றால் சாட்சியிடம் மேற்படி ஆவணத்தின் கணினிவழி சான்றிட்ட நகலை காண்பித்து அவர் ஆமாம் என்று கூறியதால், மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 3ம் பிரதிவாதியின் மனைவியின் பெயர் சங்கரானந்தம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மனைவிக்கு ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சாட்சியிடம் மேற்படி ஆவணத்தின் கணினிவழி சான்றிட்ட நகலை காண்பித்து அவர் ஆமாம் என்று கூறியதால், மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்தை 3ம் பிரதிவாதியின் மனைவி, 3ம் பிரதிவாதியின் சகோதரர் சொர்ணவிநாயத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான்

சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சாட்சியிடம் மேற்படி ஆவணத்தின் கணினிவழி சான்றிட்ட நகலை காண்பித்து அவர் ஆமாம் என்று கூறியதால், மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. குளத்துாரம்மாள் என்பவர் வாதியின் தந்தை வழி பாட்டியாவார். பழனிச்சாமியும், சொர்ணவிநாயகமும் 3ம் பிரதிவாதியின் சகோதரர்கள் ஆவார்கள். கைலாச வடிவு என்பவர் 3ம் பிரதிவாதியின் சகோதரி ஆவார். ராமலட்சுமி என்பவர் குளத்துாரம்மாளின் மகளாவார். மேற்படி ராமலட்சுமி அம்மாளின் வாரிசுகள் முத்தரசு, பிரம்மநாயகம் மற்றும் சிவானந்த சுவாமிநாதன்.

9. அ.வ.எண்.129/2009 வழக்கில் மேற்படி குளத்துாரம்மாள், பழனிச்சாமி, சொர்ணவிநாகயம் ஆகியோர்கள் வழக்கில் தரப்பினராக இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் குளத்துாரம்மாள் வழக்கு நடத்தினரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

10. வாதி 3ம் பிரதிவாதியின் பாத்தியத்தில் உள்ள சொத்தில் தான் பங்கு கேட்கிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தென்காசியில் 5-6 வருடங்களாக கடை நடத்திவருகிறார் என்றால் சரிதான். அது ஸ்பேர்பார்ட்ஸ் கடையாகும். அது தற்போது நடத்திவரவில்லை என்றால் சரிதான். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரிதான், அவர் குடும்பத்தை பராமரிக்கவில்லை. நஷ்டத்திற்காக தான் கடன் வாங்கினார்

என்றும், அவர் ஊதாரித்தனமாக செலவு செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

11. 2ம் பிரதிவாதி சொத்தில் பங்கு கேட்கவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வாதிக்கு நியாயம் வேண்டி தான் நான் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் வழக்கை கால தாமதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்தியன் ஓவர்சிஸ் வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் வங்கி அனுமதியுடன் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பிறப்பித்துக்கொடுத்தேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**